*1973 நவம்பர் 30]*

ஒப்புதல் அளித்துள்ள வேலைகளுக்குச் செலவு செய்யலாம் என்று அரசு வரையறுத்துள்ளது. இந்த ஒதுக்கீட்டில் செய்து முடிக்கப்படாத வேலைகள் "எஞ்சியுள்ள வேலைகள்" என்று கருதப் பட்டு பின்வரும் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப் படும். இந்த இரண்டு கட்டங்களிலும் சேர்க்கப்படாதிருந்த 1,500-ம் அதற்கு மேற்பட்டுள்ள மக்கட்தொகையைக் கொண்ட ஊரகப் பகுதிகள், இந்தச் சிறப்புத் திட்டத்தின் பின்வரும் கட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்படும் சாலை வேலைகள் பராமரிப்புக்கு நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினரால் எடுத்துக் கொள்ளப்படும். வினா 522-ல் குறிப்பிட்டுள்ள களுகர் கடை சாலை மதுரை-மண்டபம் சாலையிலிருந்து பிரிந்து களுகர் கடை செல்கிறது. அதன் நீளம் 1.40 கி.மீ. அது சரளைகல் பரத்தி தார் சாலையாகப் போடப்படும்.

திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள சாலைகள்.

* 521. வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் தார்ச் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு** திரு. அ. பெ. தர்மலிங்கம் : இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 18—5—1973 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை எண் 1014-ல் ஆணை யிட்டுள்ளது.

* 522 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையில் இருந்து களுகர் கடை செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இவ் வேலையை சிறப்பு கிராமச்சாலைத் திட்டத்தின் இரண்டாவது படிவத்தில் சேர்த்து செயல்படுத்த அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது.

### மானாமதுரை ஒன்றியத்திலுள்ள சாலைகள்

*** 523 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், வேம்பத்தூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் பெரியகோட்டை-வேம்பத்தூர் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 17—6—1972 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை என் 1212-ல் ஆணையிட்டுள்ளது.

(இ) அதன் மதிப்பீடு ரூபாய் 1,25,500.

*** 524 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பசலைக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிற ரோடு வேலைகள்கூட நடப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. உடனடியாக வேலை செய்வதற்கு உத்தரவிடுவார்களா? மேலும் கடைசியில் சொன்ன கீழ்ப்பசலை